முற்பகல் 11–10

6. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்கள் பேரவையின் 5–வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *ஆக நியமிக்கப்படுகிறார்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2012–2013, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012–2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பும், பெருமையும்மிக்க இந்த மாமன்றத்தில் இந்த ஆண்டின் முதல் துணை நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும் நல்வாய்ப்பை எனக்கு நல்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு மாபெரும் இயக்கத்தின் தலைவர் மட்டுமல்ல, அவர் ஒரு வரலாறு. மாண்புமிகு அம்மா அவர்களின்